சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :08.11.2024

வா.சா.1 – கெங்கையம்மாள்

O.S No. 120/2022 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

எனக்கு சொந்த ஊர் கொட்டாம்பட்டி அருகே உள்ள சொக்கம்பட்டி. எனக்கு சொந்த ஊர் சொக்கம்பட்டி தான் அது எந்த வருவாய் துறை கிராமத்தில் வருகிறது என்று தெரியவில்லை எந்த கிராம நிர்வாக அலுவலர் கட்டுபாட்டில் வருகிறது என்று தெரியவில்லை. வழக்கு சொத்து அட்டபட்டி கிராமத்தில் உள்ளது. எங்கள் ஊருக்கும், அட்டப்பட்டி கிராமத்திற்கும் இடையே 6-7 மைல் இருக்கும். அட்டபட்டி கிராமம் எங்கள் ஊரில் இருந்து தெற்கே உள்ளது. நான் ராம்சிங் என்பவரிடம் இருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றேன். ராம்சிங்கிற்கு சொத்து எப்படி பாத்தியம் என்பது தெரியவில்லை. ஆனால் சொத்தை எங்களிடம் விற்பனை செய்துவிட்டார். ராம்சிங்கிடம் இருந்து மூல பத்திரங்கள் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பழ வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்றுவிட்டேன். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெற்றேன் என்று எனக்கு நினைவில்லை. ராம்சிங் என்பவரிடம் இருந்து நான் வழக்கு சொத்தை முறைப்படி கிரையம் பெறவில்லை என்றும், அதனால் தான் எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினேன் என்று தெரியவில்லை என்றால் சரியல்ல. ராம்சிங் உடைய

அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொத்தை வாங்கும் போது வில்லங்கம் பார்க்கவில்லை. ராம்சிங் யாரென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் அண்ணன் தேவர் கூறியதன் அடிப்படையில் சொத்தை கிரையம் பெற்றேன். வழக்கு சொத்து நான் கிரையம் பெறும் போது தரிசு நிலம் ஆகும். கிரையம் பெற்ற பிறகு நான் வழக்கு சொத்துக்கு வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். வரிரசீதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் மானாவாரி பயிர் செய்து வருகிறேன். வழக்கு சொத்திற்கான அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரையம் பெற்று ஒரு வருடம் வரை வரி செலுத்தி வந்தேன். அதன்பின்பு வரி வாங்க மறுத்துவிட்டார்கள். வரி வாங்க மறுத்தவுடன் வேறு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் இந்த வழக்கை தவிர வருவாய்துறையில் வேறு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வழக்கு சொத்தில் 20 வருடமாக நான் அனுபவம் செய்து வருகிறேன். நான் பிற்பட்ட சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். ராம்சிங் என்ன சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் அதுபற்றி தெரியாது. என் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டாவானது அறிவிப்பின்றி ரத்து செய்யப்பட்டதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முறையான அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னர் தான் பஞ்சமர் தரிசு என்று நிலம் வகைப்பாடு செய்யப்பட்டிருந்ததால் பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முறையாக வில்லங்கம் பார்த்திருந்தாலும் வருவாய் துறை ஆவணங்களை பரிசீலனை செய்திருந்தாலும் பஞ்சமர் தரிசு என்று கண்டுபிடித்திருக்கலாம் என்றும், அவ்வாறு நான் பார்க்காமல் தவறாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியிருக்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு சொத்து அரசுக்கு சொந்தமான பஞ்சமி தரிசு என்றால் சரியல்ல. ஆதியில் இருந்தே பஞ்சமர் தரிசாக

இருந்துவந்த பூமி என்பதால் அதை நான் கிரையம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2024.11.08 17:47:22 +0530

Sub Judge

Melur